தரம்-04 மாணவர்களுக்கு...



வினாப்பத்திரம் – I

தினக்குரல் THINAKKURAL

கல்விக்குரல் நடாத்தும்

திறந்த தொடர் மாதிரிப் பரீட்சை – 01

நேரம் : 1 மணித்தியாலம்

மாணவர் பெயர் : .....


பாடசாலையின் பெயர் : .....


அனுப்ப வேண்டிய முகவரி : "தரம் – 4 திறந்த பரீட்சை"
கல்விக்குரல், யாழ்.தினக்குரல்
இல– 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

விடையளித்த வினாத்தாள்கள் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி : 24.11.2020 (செவ்வாய்க்கிழமை)

உங்கள் பிள்ளைகளின் பெறுபேறுகள் 27.11.2020 (வெள்ளிக்கிழமை) பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

01. முதலில் தரப்பட்டுள்ள உருவிற்குச் சமனான உருவின் கீழ்க் கோடிடுக.




1. 

2. 


3. 

❖ **02ஆம், 03ஆம் வினாக்களில் உள்ள உருக்களை ஒரு குறித்த இயல்புகளுக்கேற்ப பிரிக்கலாம். அவ்வுருக்களைக் கொண்ட கூட்டத்தின் கீழ்க் கோடிடுக.**


02.



1.




2.




3.


03.



1.




2.



3.


04. உருக்களிடையே பொது இயல்புகளுக்கமைய பொருந்தும் உருச்சோடியைக் கொண்ட விடையின் கீழ்க் கோடிடுக.





1. AB – CD
2. AD – BC
3. AC – BD


❖ **05, 06 ஆம் வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள பட ஒழுங்கை அவதானித்து வினாக்குறிக்குள் வரவேண்டிய உருவினைத் தெரிவு செய்க.**

05.





1. 


2. 


3. 

06.



1. 

2. 

3. 


❖ **07, 08 ஆம் வினாக்களில் புள்ளிக்கோடிடப்பட்ட இடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

07. மீனவனுக்குக் கடல் போன்று விளையாடுபவனுக்கு : .....

1. மைதானம்
2. பந்து
3. துடுப்பு

08. பசிக்கு உணவு போன்று, நோய்க்கு : .....

1. வைத்தியசாலை
2. வைத்தியர்
3. மருந்து

09. 

இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை?

1. 2
2. 5
3. 4

10. கிரிக்கெட் இறுதிப்போட்டியில் தெரிவான இலங்கை அணியின் வீரர்கள் தமக்கிடையே கைகளைக் குலுக்கிக் கொண்டனர். எனின், அவர்களுக்கிடையே இடம்பெற்ற கைக்குலுக்கல்கள் எத்தனை?

1. 60
2. 45
3. 55


11. 

படத்திலுள்ள தாயக்கட்டையின் 3 ஆம் எண்ணிற்கு எதிரே உள்ள எண் யாது?


1. 5
2. 4
3. 6

❖ **பின்வரும் எண்கோலத்திற்கு அமைய இடைவெளியில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.**


12.



1. 4




2. 5




3. 8


13.



1. 25



2. 75



3. 50


14. சிவப்பு, பச்சை, மஞ்சள், நீலம் என்ற ஒழுங்கில் கொடிக் கம்பங்கள் நடப்பட்டுள்ளன எனின், அங்கு மொத்தமாக 38 கொடிக்கம்பங்கள் நடப்பட்டுள்ளன எனின், பச்சை நிறக் கொடிகள் எத்தனை நடப்பட்டிருக்கும்?

1. 10
2. 9
3. 11

15. ஒரு இறைச்சிக் கடையில் கோழிகளும், ஆடுகளுமாக 15 தலைகள் உள்ளன. அவற்றின் கால்களின் மொத்த எண்ணிக்கை 42 எனின்,அங்கு ஆட்டு இறைச்சிக்காக வெட்டப்பட்ட ஆடுகள் எத்தனை?

1. 7
2. 6
3. 8

❖ **பின்வரும் உருக்களின் விலைகளை அவதானித்து 16 ஆம், 17 ஆம் வினாக்களுக்கு சரியான விடையினைத் தெரிவு செய்க.**



16. அன்னாசி ஒன்றின் விலை யாது?

1. ரூபா 26.00
2. ரூபா 28.00
3. ரூபா 32.00

17. தோடம்பழம் இரண்டினை வாங்கி கடைக்காரரிடம் ரூ 20 ஐக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?

1. ரூபா 12.00
2. ரூபா 8.00
3. ரூபா 4.00

18. 

தரப்பட்ட முட்கடிகாரத்தை முகம்பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது காட்டும் நேரம்,

1. 8.00
2. 7.00
3. 4.00


❖ **19 ஆம், 20 ஆம் வினாவிக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

19. "பந்துல கொழும்பில் வசிக்கின்றான். கொழும்பிலே கொரோனா தொற்று நோய் அதிகம் ஏற்பட்டுக் காணப்படுகின்றது. ஆனால் பந்துலவிற்கு கொரோனா தொற்று ஏற்படவில்லை" இதற்கான காரணமாக அமையத்தக்க கூற்று,
    1. பந்துல சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களை மிகச்சரியாக கடைப்பிடித்தான்.
    2. பந்துல அடிக்கடி கைகளைக் கழுவிக்கொள்வதும், முகக் கவசம் அணிந்திருப்பதையும் பழக்கப்படுத்திக் கொண்டான்.
    3. பந்துல வீட்டை விட்டு வெளியில் எங்கும் செல்லவில்லை.

20. நான் ஆகாயத்தில் பறப்பேன். ஆகாயத்தில் முகில்களுக்கு இடையேயும் நான் சிலவேளைகளில் பறக்கின்றேன். சிறகுகளை அசைக்காமல் என்னால் பறக்கத்தக்கதாக இருத்தல் புதுமையான விடயமாகும். நான் பறக்கும் போது சத்தம் உண்டாகின்றமையால் கீழே உள்ளவர்கள் நான் ஆகாயத்தில் பறப்பதை அறிந்து கொள்வர். விசேடமாகச் சிறிய பிள்ளைகள் என்னைப் பார்த்து மகிழ்ச்சியடைவதை நான் அறிவேன். இக்கூற்றுக்குப் பொருத்தமானது,
    1. பருந்து
    2. பட்டம்
    3. ஆகாய விமானம்


21. பாலா மாறனிலும் உயரம் குறைந்தவன். ஆனால் முரளியிலும் உயரமானவன். நீதன் முரளியிலும் உயரம் குறைந்தவன். ஆனால் தரணியிலும் உயரமானவன். எனின், இரண்டாவது உயரமானவன் யார்?
    1. மாறன்
    2. பாலா
    3. முரளி

22. பென்சிலின் நீளத்தை சரியாகக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.



    1. 3.5 cm
    2. 4.5 cm
    3. 5 cm

❖ **தரவினை அவதானித்து 23ஆம், 24ஆம், 25ஆம் வினாக்களுக்கு சரியான விடையினைத் தெரிவு செய்க.**



23.  இன் பெறுமானம் ,
    1. 4
    2. 2
    3. 3

24.  இன் பெறுமானம் ,
    1. 6
    2. 12
    3. 8


25.  இன் கூட்டுத்தொகை,
    1. 21
    2. 18
    3. 9

26. பின்வரும் பாடலினால் குறிப்பிடப்படுவது எது?


எல்லையை அறிந்து அங்குமிங்கும் செல்வான்
துன்பத்திலும் இன்பத்திலும் எப்போதும் நனைவான்
விபத்துக்கள் ஏற்பட ஒருபோதும் இடமளியான்
கதவுகள் இரண்டையும் விரைவில் மூடிவிடுவான்

    1. மூக்கு
    2. கண்
    3. வாய்

❖ **27 ஆம், 28 ஆம் வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள பட அமைப்பை ஏதோ ஒரு விதத்துக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

27. 

    1. ACBED
    2. BCAED
    3. AECBD

28. 

    1. ACEBD
    2. ACEDB
    3. CEABD

www.ikedu.lk

❖ **நான்கு தொழிலாளர்கள் வேலைக்கு வந்த நேரத்தை கடிகாரம் காட்டுகின்றது. இதை அவதானித்து 29 - 31 வரையான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.**






பாலன் குமார் குயிலன் சரணி

29. வேலைக்கு முதலில் வருகை தந்தவன் யார்?
    1. குமார் 2. பாலன் 3. குயிலன்

30. வேலைக்கு இறுதியில் வருகை தந்தவன் யார்?
    1. சரணி 2. சரணி 3. குமார்

31. வேலைக்கு இரண்டாவதாக வருகை தந்தவன் யார்?
    1. குயிலன் 2. குமார் 3. பாலன்

32. கமல் தன்னிடமுள்ள பழங்களில் 3/8 ஐ குமாரிடமும், எஞ்சியதில் 2/5 ஐ விமலிடமும் கொடுத்த பின்னர் கமலிடம் 15 பழங்கள் உள்ளன எனின், கமலிடம் ஆரம்பத்தில் உள்ள பழங்கள் எத்தனை?
    1. 35 2. 40 3. 60

33. பின்வரும் உருக்களில் ¼ பகுதி நிழற்றப்பட்ட உருவின் கீழ்க் கோடிடுக.
    1.  2.  3. 

34. கலை நிகழ்ச்சி ஒன்று மு.ப 9.00 மணிக்கு தொடங்க வேண்டிய கலைநிகழ்ச்சியானது 1மணித்தியாலம் 15 நிமிடத்தின் பின்னர் தொடங்கப்பட்டது எனின், அந்நிகழ்ச்சி தொடங்கிய நேரம் என்ன?
    1. மு.ப 10.15 2. பி.ப 12.00 3. பி.ப 11.15


35. 2020, 2019, 2018, 2017, 2016 ஆகிய ஆண்டில் லீப் வருடங்கள் எவை?
    1. 2019, 2018 2. 2016, 2018 3. 2020, 2016

36. சுனாமி நினைவேந்தல் ஒன்றிற்காக 25 மெழுகுவர்த்திகள் ஒரே தடவையில் ஏற்றப்பட்டன. ஒரு மெழுகுவர்த்தி எரிந்து முடிவதற்கு 8 நிமிடங்கள் எடுக்கின்றது. எனின், அனைத்து மெழுகுவர்த்திகளும் எரிந்து முடிவற்கு எவ்வளவு நேரம் எடுக்கும்?
    1. 200 நிமிடங்கள் 2. 8 நிமிடங்கள் 3. 16 நிமிடங்கள்

37. வீதியொன்றில் சம இடைவெளியில் 25 கம்பங்கள் நடப்பட்டிருந்தன. சீரான வேகத்தில் செல்லும் மோட்டார் வாகனமானது முதலாவது கம்பத்திலிருந்து ஐந்தாவது கம்பத்தைக் கடக்கும் போது 16 நிமிடங்கள் எடுத்தது. எனின், 25 ஆவது கம்பத்தைக் கடக்கும் போது இன்னும் எவ்வளவு நேரம் எடுக்கும்?
    1. 100 நிமிடங்கள் 2. 92 நிமிடங்கள் 3.96 நிமிடங்கள்

38. ஒரு சதுரவடிவமான காணியினைச் சுற்றி ஒருபக்கத்திற்கு 8 தூண்கள் வீதம் நாட்டப்படும் எனின், அக்காணியைச் சுற்றி நாட்டப்பட்ட தூண்களின் எண்ணிக்கை யாது?
    1. 32 தூண்கள் 2. 26 தூண்கள் 2. 28 தூண்கள்

39. மாலை நேரத்தில் கண்ணன் நடந்து சென்றிருந்த போது அவனது நிழல் பின்னால் விழுந்தது எனின், அவன் எத்திசையை நோக்கி சென்றிருப்பான்?
    1. கிழக்கு 2. மேற்கு 3. வடக்கு

40. 

ஒரு பிள்ளை A யிலிருந்து B வரை பயணஞ்செய்த முறையை இவ்வுரு காட்டுகிறது. உருவின்படி, பிள்ளை பயணஞ்செய்த முழுத் தூரம்,

1. 40 m
2. 30 m
3. 44 m

www.ikedu.lk



மாணவர் பெயர் : .....

பாடசாலையின் பெயர் : .....

அனுப்ப வேண்டிய முகவரி : "தரம் – 4 திறந்த பரீட்சை"
கல்விக்குரல், யாழ்.தினக்குரல்
இல– 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

விடையளித்த வினாத்தாள்கள் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி : 24.11.2020 (செவ்வாய்க்கிழமை)

உங்கள் பிள்ளைகளின் பெறுபேறுகள் 27.11.2020 (வெள்ளிக்கிழமை) பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

01. பின்வரும் பந்தியை நன்றாக வாசியுங்கள்.

ஊக்கமும் விடாமுயற்சியும் வெற்றிக்கு ஏணிப்படிகள். இன்று நம் வீடுகளில் மின் விளக்குகள் எரிகின்றன. ஒன்றரை நூற்றாண்டுக்கு முன் இந்த மின்விளக்குகள் நம்மிடையே இல்லை. தோமஸ் அல்வா எடிசன் என்பவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மின்விளக்கைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்தார். தமது முதல் முயற்சியிலே தோல்வி கண்டார். சளைக்காது தனது ஆய்வைத் தொடர்ந்தார். பல முறைகள் தோல்வியைக் கண்ட அவர் இறுதியில் தம் ஆராய்ச்சியில் வெற்றிகண்டார். மின்விளக்கு எரியத் தொடங்கியது. "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கு இணங்க வெற்றி பெற்றார். இன்றும் வீடுகளிலே மின்விளக்குகள் எரிய முன்னோடியாகத் திகழ்ந்த அறிவியல் மேதை தோமஸ் அல்வா எடிசன் ஆவார்.

பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i). யாருடைய சாதனை பற்றி இங்கு கூறப்பட்டுள்ளது? .....

(ii). வெற்றிக்கு ஏணிப்படிகள் எவை? .....

(iii). மின்விளக்குக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி எப்போது தொடங்கப்பட்டது? .....

(iv). பலமுறைகள் தோல்வியைக் கண்டாலும் இறுதியில் வெற்றி காண உதவியது எது? .....

(v). மேற்கோளாக அமையும் கூற்று எது? .....

(5 புள்ளிகள்)

02. கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

உணவினைச் / வைக்கின்றன / எறும்புகள் / வளைக்குள் / சேகரித்து

..... (1 புள்ளி)

03. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் "√" எனவும், பிழையாயின் "×" எனவும் எதிரே உள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளம் இடுக.

(i). மான்கள் துள்ளிப் பாய்ந்தது. (.....) (ii). கழுகு வானில் வட்டமிட்டது. (.....)

(iii). மரங்கள் காற்றில் ஆடி அசைந்தது. (.....) (iv). பறவை வானில் பறந்தது. (.....)

(vi). தங்கை காலையில் பாடசாலைக்குச் சென்றாள். (.....) (5 புள்ளிகள்)

04. பின்வருவனவற்றிற்கு இளமைப் பெயரை எழுதுக.

(i). தவளை - ..... (ii). பயிர் - ..... (4 புள்ளிகள்)

05. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i). ஒளியைப் பரப்புவது ..... (விலக்கு / விளக்கு)

(ii). மக்களுக்குச் சேவை செய்வது மிகச் சிறந்த ..... ஆகும். (பனி / பணி) (2 புள்ளிகள்)

06. பொருத்தமான நிறுத்தக்குறியீடுகளை இடுக.

(i). பல்லாயிரக்கணக்கான மக்களை ஆழிப்பேரலை விழுங்கிவிட்டது

(ii). அந்தப்பாறையில் குரங்கு மான் சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் கூடச் செதுக்கப்பட்டுள்ளன (2 புள்ளிகள்)

07. பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.

(i). சூடு கண்ட பூனை ..... (ii). ஒரு பானைச் சோற்றுக்கு ..... (2 புள்ளிகள்)

08. பின்வரும் வாக்கியத்தை எதிர்ப்பால் வாக்கியமாக மாற்றி எழுதுக.

அவன் ஒரு வீரன். : ..... (1 புள்ளி)

09. தரப்பட்டுள்ள இறந்தகால வாக்கியத்தை எதிர்கால வாக்கியமாக மாற்றி எழுதுக.

நேற்று சித்திரப்போட்டி நடைபெற்றது. : ..... (1 புள்ளி)

10. தனிச்சொல்லை எழுதுக.

(i). மற்றவர்களைப் பற்றி அக்கறை இல்லாதவன் : .....

(ii). தெருக்கள் கூடுமிடம் : ..... (2 புள்ளிகள்)

11. பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.

(i). Snail : ..... (ii) Monkey : ..... (2 புள்ளிகள்)

12. பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை, ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(i).  .....

(ii).  ..... (2 புள்ளிகள்)

13. பின்வரும் சொற்களை சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியம் ஆக்குக.

milk / cat / My /likes ..... (2 புள்ளிகள்)

14. "ஷிஷ்யயா" எனும் சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக. ..... (1 புள்ளி)

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

எனது பெயர் சமன். ..... (2 புள்ளிகள்)

❖ **கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையினைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

16. 863 இல் பத்துக்களில் 1 ஐக் குறைக்கும் போது பெறப்படும் எண் யாது? அவ்வெண்ணை சொற்களில் எழுதுக?

.....

17. 

இந்த நான்கு இலக்கங்களையும் பயன்படுத்தி ஆக்கக் கூடிய மிகச்சிறிய எண்ணை சொற்களில் எழுதுக?

.....


18. ஒரு மாலையில் 264 முத்துக்களும், மற்றுமொரு மாலையில் 186 முத்துக்களும் காணப்பட்டன. இரண்டு மாலைகளிலும் உள்ள முத்துக்களின் எண்ணிக்கை யாது?

(.....)

19. நாளொன்றில் விற்பனைக்காக பழ வியாபாரி ஒருவர் கொண்டு வந்த 290 மாம்பழங்களுள் அந்நாளில் இறுதியில் எஞ்சியிருந்த பழங்களின் எண்ணிக்கை 117 ஆகும். அன்றைய தினம் விற்பனை செய்யப்பட்ட மாம்பழங்களின் எண்ணிக்கை யாது?

(.....)

20. 20 பந்துகளின் கால்வாசிப் பந்துகளின் எண்ணிக்கை யாது? (.....)

21. 

இவ்வுருவின் பெயர் யாது? (.....)

இதற்கு எத்தனை முகங்கள் உண்டு? (.....)

22. வகுப்பொன்றில் உள்ள 39 மாணவர்களுக்கு, ஒருவருக்கு இரண்டு வீதம் பென்சில்கள் வழங்கப்பட்டன. வழங்கப்பட்ட பென்சில்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(.....)

23. 

கடிகாரம் காட்டும் நேரத்துடன் ஒரு மணித்தியாலத்தை கூட்டினால் பெறப்படும் நேரத்தை எழுதுக?

(.....)

24. மில்லிலீற்றரில் எழுதுக. 8 l 70 ml (.....)

25. 250g மீனின் விலை ரூபா 110.00 எனின், 1 ½ kg மீனின் விலை யாது? (.....)

26. வாளி ஒன்றில் 4 லீற்றர் 250 மில்லிலீற்றர் நீர் இருந்தது. மேலும் 3 லீற்றர் 750 மில்லிலீற்றர் நீர் ஊற்றப்பட்டால் அவ்வாளியில் இருக்கும் நீரின் அளவு யாது?

(.....)

www.lkedu.lk

27. பின்வரும் சிட்டையைப் பூர்த்தி செய்க.

பொருள்	அளவு	ஒன்றின் விலை (1Kg)	பெறுமதி
சீனி	500g	90.00	45.00
தேயிலை	250g	420.00	.....
மொத்தம்			.....


28. 3kg 100g நிறையுள்ள ஒரு வத்தகைப்பழமும் 1kg 850g நிறையுள்ள மற்றுமொரு வத்தகைப்பழமும் உள்ளன. இந்த இரண்டு வத்தகைப் பழங்களின் மொத்த நிறை யாது?

(.....)

29. சமனான அளவுள்ள மூன்று மேசைகளில் விரிப்பதற்காக, 3m 75cm மேசைத்துணி கொண்டுவரப்பட்டது. ஒரு மேசைக்குத் தேவையான துணியின் நீளம் எவ்வளவு?

(.....)

30.



மாணவர் விரும்பும் பாடம் பற்றிய விபரம் வரைபில் காட்டப்பட்டுள்ளது.

(i). குறைவாக விரும்பப்படும் பாடம் எது? (.....)

(ii). தகவல் வழங்கிய மொத்த மாணவர் தொகை எவ்வளவு? (.....)

❖ **31 தொடக்கம் 60 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

31. பின்வருவனவற்றுள் இயற்கை அனர்த்தமாக அமையாதது,
(1). வெள்ளப்பெருக்கு (2). வாகன விபத்து (3). மின்னல் தாக்குதல்

32. குளிர்பானப் போத்தல்களில் அதிகளவு சீனி அதிகளவு உள்ளதெனின், அக்குளிர்பானப் போத்தல்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிறமானது,
(1). மஞ்சள் (2). பச்சை (3). சிவப்பு

33. 

இக் குறியீட்டின் பெயரானது,
(1). இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்
(2). இலங்கை சுவர்ணவாகினிக் கூட்டுத்தாபனம்
(3). நேத்திரா அலைவரிசை

34. எமது நாட்டில் சில மரபுரிமைகள் தேசிய மரபுரிமைகளாக மட்டுமன்றி உலக மரபுரிமைகளாகவும் கணிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் உள்ளடங்காதது,
(1). சிகிரியா (2). சிங்கராசவனம் (3). பாடசாலைகள்

35. தலதா ஊர்வலம் நடத்தும் மதத்தவர்,
(1). சிங்களவர் (2). தமிழர் (3). முஸ்லிம்கள்

36. 
இக் குறியீடு குறிப்பது,
(1). தீ பற்ற வைப்பது ஆபத்தானது (2). பூக்களை பறிக்காதீர்கள் (3). தீ பற்ற வைக்கலாம்

37. சிவப்பு நிறத்தையும் மஞ்சள் நிறத்தையும் சேர்க்கும் போது கிடைக்கும் நிறம் யாது?
(1). இளஞ்சிவப்பு (2). செம்மஞ்சள் (3). மஞ்சள்

38. ஒலிம்பிக் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முதற்பரிசு வழங்கப்படுவது எது?
(1). வெள்ளிப்பதக்கம் (2). தங்கப்பதக்கம் (3). வெங்கலப்பதக்கம்

39. நல்வாழ்விற்கு அவசியமானவைகள் அல்லாதது,
(1). அன்பு செலுத்துதல் (2). கோபம் கொள்ளுதல் (3). தியானம்

40. கரும் பச்சை நிறக் காய்கறிகளில் காணப்படும் போசணைக் கூறு,
(1). கல்சியம் (2). புரதம் (3). இரும்பு

41. ஒருவர் மாத்திரம் தனியாகப் பயன்படுத்தும் பொருளானது,
(1). மேசை (2). பற்தூரிகை (3). கட்டில்

42. 
இவ் இசைக்கருவியின் பெயரானது,
(1). புல்லாங்குழல் (2). நாதஸ்வரம் (3). கொம்பு

43. நாம் தவிர்க்க வேண்டிய உணவு எது?
(1). நிறை உணவு (2). மரக்கறிகள் (3). பொரித்த உணவு

44. கரப்பந்தாட்டத்தில் ஒரு அணியில் உள்ளவர்களின் எண்ணிக்கை,
(1). 12 பேர் (2). 6 பேர் (3). 7 பேர்

45. பின்வரும் இசைக்கருவியில் நரம்புக்கருவியைக் குறிப்பது,
(1). மிருதங்கம் (2). புல்லாங்குழல் (3). யாழ்

www.ikedu.lk

46. இலங்கை இந்தியாவிற்கு எத்திசையில் அமைந்துள்ளது?

(1). வடக்கு (2). தெற்கு (3). கிழக்கு

47. நீரில் கொண்டிசுத் தூளை இட்டால் கிடைக்கும் திரவத்தின் நிறம் யாது?

(1). சிவப்பு (2). மஞ்சள் (3). ஊதா

48. பொது வாகனத்தில் பயணம் செய்யும் போது கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் அல்லாதது,

(1). பேருந்தில் தரிப்பிடத்தில் நின்று ஏறுதல்.

(2). மிதிபலகையில் பயணம் செய்யக் கூடாது.

(3). பயணச் சீட்டைப் பெறாது பயணம் செய்ய வேண்டும்.

49. தேசிய இலச்சினையில் நெற்கதிர்கள் குறிப்பது,

(1). சௌபாக்கியம் (2). தன்னிறைவும் செழிப்பும் (3). தார்மீகம்

50. இலங்கை முழுவதையும் பிரித்தானியர் கைப்பற்றிய ஆண்டு,

(1). 1915 (2). 1715 (3). 1815

51. மாணவர்கள் நாட்டிற்கு செய்ய வேண்டிய கடமைகள் அல்லாதது,

(1). சட்டதிட்டங்களை மதித்தல்

(2). பொதுச்சொத்துக்களை பாதுகாத்தல்

(3). பாடசாலை வழங்களை அழித்தல்

52. காந்தத்தின் வடமுனைவு குறிக்கப்படும் நிறம்,

(1). சிவப்பு (2). நீலம் (3). பச்சை

53. பொலித்தீன், பிளாஸ்திக் கழிவுகளை இடுவதற்காக வைக்கப்படும் குப்பைப் பெட்டியின் நிறம்,

(1). நீலம் (2). செம்மஞ்சள் (3). சிவப்பு

54. ஒருவர் மயக்கமடைந்ததும் உடனடியாகச் செய்ய வேண்டியது,

(1). வாயினுள் கரண்டியை வைத்தல்

(2). உடலை நன்கு போர்த்துதல்

(3). நன்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்தல்

55. உடலுக்கு சக்தியைத் தரும் உணவு வகைகளைக் குறிப்பது,

(1). காபோவைதரேற்று, கொழுப்பு கொண்ட உணவுகள்.

(2). புரதம் அடங்கிய உணவுகள்

(3). விற்றமின் , கனியுப்புக்கள் அடங்கிய உணவுகள்

56. எமது நாட்டிலுள்ள புதிய தாள் காசுகள் அனைத்தினதும் பொதுவான பண்பாக அமையாதது,

(1). அகலம் 67 mm ஆக இருத்தல்.

(2). பார்வையற்றோர் இனங்காணக்கூடியவாறு பிறேயில் புள்ளிகள் சம எண்ணிக்கையில் காணப்படும்.

(3). நீதி அமைச்சரினதும், மத்தியவங்கி ஆளுநரினதும் கையொப்பம் காணப்படும்.

57. தாவர இலைகளை உணவாக உட்கொள்ளும் பிராணி,

(1). தேனீ (2). வண்ணத்துப்பூச்சி (3). மயிர்கொட்டி

58. பின்வரும் தகவல் ஊடகங்களுள் இலத்திரனியல் ஊடகம்,

(1). தொலைக்காட்சி (2). பத்திரிகை (3). சுவரொட்டி

59. தமிழர்களின் திருமணப் பழக்கவழங்களில் ஒன்று,

(1). புதுமணத் தம்பதிகளுக்கு கையில் நீர் வார்த்தல்

(2). நீர்ப்பாத்திரம் கொடுத்து விருந்துண்ண வரவேற்றல்

(3). மணமகனைக் கால் கழுவி வரவேற்றல்

60.  இக் குறியீடு குறிப்பது,

(1). ஈரலிப்பானது

(2). பொருள் தண்ணீரில் நனையாமல் பார்த்துக்கொள்ளவும்

(3). உடையக்கூடியது

61. எமது நாட்டின் தேசிய கீதம் என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)

(i). .....

(ii). .....

(iii). .....

www.slkedu.lk